(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 31.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2024 யூன் 19, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

466/2024

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாணத்தில், ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தினாலும் கழிவுகள் அகற்றப்படுகின்ற இடங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) தற்போது மேல் மாகாணத்தில் பாரியளவில் கழிவுகள் சேகரிக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவை அமைந்துள்ள இடங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி இடங்களை அண்டியதாக வாழும் மக்களுக்கு பல்வேறு சுற்றாடல்சார் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

511/2024

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில், மதவாச்சி வர்த்தக அங்காடியின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி வர்த்தக அங்காடியை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி வர்த்தக அங்காடியை துரிதமாக திறந்து வைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

542/2024

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கிளைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பணியகத்தின் கீழுள்ள பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி பயிற்சி நிலையங்களால் நடத்தப்படுகின்ற கற்கைநெறிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை வெளிநாடு சென்றுள்ள பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கமைவாக தனித்தனியே த்தனையென்பதையும்;

(ii) இன்றளவில் பயிற்சி பெற்ற / பயிற்சி பெறாத தொழிலாளர்களைக் கோரியுள்ள நாடுகள் மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

565/2024

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி யாதென்பதையும்;

(ii) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பணியாற்றும் அத் திணைக்களத்திற்குரிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் இணைந்த சேவைக்குரிய ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குரிய நிறைவேற்றுத் தரத்திலுள்ள அலுவலர்களுக்கும், நிறைவேற்றுத் தரத்திலல்லாத அலுவலர்களுக்கும், கனிஷ்ட ஊழியர்களுக்கும் செலுத்தப்படுகின்ற மாதாந்தச் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் ஒவ்வொரு பதவிக்கும் அமைவாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) இணைந்த சேவைக்குரிய நிறைவேற்றுத் தரத்திலுள்ள அலுவலர்களுக்கும், நிறைவேற்றுத் தரத்திலல்லாத அலுவலர்களுக்கும், கனிஷ்ட ஊழியர்களுக்கும் செலுத்தப்படுகின்ற மாதாந்தச் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் ஒவ்வொரு பதவிக்கும் அமைவாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

590/2024

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு பறவைகளை இறக்குமதி செய்ய அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறாயின், பறவைகளை இறக்குமதி செய்ய அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள நாடுகள் யாவை;

(iii) அத்தகைய அங்கீகாரத்தை அளிக்கும்போது, பறவைக் காய்ச்சலுடன் சம்பந்தப்பட்ட அளவுகோல்கள் கவனத்தில்கொள்ளப்பட்டுள்ளனவா;

(iv) அதற்கான அங்கீகாரத்தை அளிக்கும்போது, கவனத்தில்கொள்ளப்பட்ட ஏனைய அளவுகோல்கள் யாவை;

(v) இறக்குமதி செய்யப்படுகின்ற பறவைகளிலிருந்து பறவைக் காய்ச்சல் பரவும் ஆபத்து காணப்படுமாயின், அதன் நிமித்தம் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

611/2024

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய சனாதிபதி, சனாதிபதியாக பதவி ஏற்ற திகதி தொடக்கம் இதுவரை மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விஜயத்தின்போதும் சந்தித்த அரச தலைவர்கள் தனித்தனியே யாரென்பதையும்;

(iii) மேற்படி அரச தலைவர்களுடன் இராஜதந்திர ஒப்பந்தங்கள் எட்டப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வொப்பந்தங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயத்தின்போதும் சனாதிபதியுடன் கலந்துகொண்டுள்ள ஏனைய பிரதிநிதிகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயத்திற்காகவும் செலவிடப்பட்ட தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

636/2024

கௌரவ பீ.வை.ஜீ.ரத்னசேக்கர,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் தலையீட்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பப்பட்டுள்ள நாடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நாடுகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) 2023 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் தலையீடின்றி வெளிநாட்டு வேலைவாய்ப்பு களுக்காக சென்றுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஆண்டில் வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களால் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள மொத்த அந்நியச் செலாவணி எவ்வளவு என்பதையும்;

(v) எதிர்காலத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கையைச் சேர்ந்த பயிற்சிபெற்ற தொழிலாளர்களை அனுப்புவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1092/2024

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “பால் உற்பத்தி அபிவிருத்தி கடன் திட்டம்" தற்போது நடைமுறையில் உள்ளதா;

(ii) “1000 பாற் பண்ணைகளை அமைக்கும் வேலைத்திட்டத்தின்" கீழ் இன்றளவில் அமைக்கப்பட்டுள்ள பாற்பண்ணைகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி பாற்பண்ணைகளிலிருந்து வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் திரவப் பாலின் அளவு யாது;

(iv) இதன் கீழ் எதிர்காலத்தில் அமைக்கப்படவுள்ள பாற் பண்ணைகளின் எண்ணிக்கை யாது;

(v) இந்த வேலைத்திட்டத்துக்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் தொடர்ச்சியாக வழங்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1127/2024

கௌரவ டீ. வீரசிங்க,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டதால் அலங்கார மீன் ஏற்றுமதியாளர்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இலங்கையில் இருக்கின்ற அலங்கார மீன் ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ஒவ்வோராண்டு வாரியாக தனித் தனியாக யாது என்பதையும்;

(iv) அலங்கார மீன் வளர்ப்புத் தொழிற்றுறையை பாதுகாக்க நடைமுறைப்படுத்தியுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1154/2024

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொல்பொருள் அகழ்வுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அகழ்வு/அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(iv) தேவையான நிதி ஏற்பாடுகள் கிடைக்காமை காரணமாக தற்போது அகழ்வு/ அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ள தொல்பொருளியல் இடங்கள் யாவை என்பதையும்;

(v) எதிர்காலத்தில் அகழ்வு /அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— வெளிநாட்டுத் தீர்ப்புக்களைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல், மற்றும் வலுவுறுத்துதல்,— ஏனைய நாடுகளின் நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை இலங்கையில் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; (93 ஆம் அத்தியாயமான) வெளிநாட்டுத் தீர்ப்புக்களின் வலுவுறுத்துகைக் கட்டளைச்சட்டம் மற்றும் (94 ஆம் அத்தியாயமான) தீர்ப்புக்களின் பரஸ்பர வலுவுறுத்துகைக் கட்டளைச்சட்டத்தை நீக்குவதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 3 ஆம் இலக்கப் பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 27 ஆம் இலக்கப் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 4 ஆம் பிரிவின் கீழ் சீட்டாட்டத் தொழில் உரிமமளித்தல் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 சனவரி 12 ஆம் திகதிய 2366/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 4 ஆம் பிரிவின் கீழ் சீட்டாட்டத் தொழில் உரிமமளித்தல் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 02 ஆம் திகதிய 2369/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சீட்டாட்டத் தொழில் உரிமமளித்தல் ஒழுங்குவிதிகள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 22 ஆம் திகதிய 2381/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 22 ஆம் திகதிய 2381/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 001 - நிகழ்ச்சித்திட்டம் 02 — † 2024 சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பமாகி 2024 டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதி ஆண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறேதேனும் நிதியிலிருந்து அல்லது தொகையிலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பத்தின் பேரில் அரசாங்கத்தினால் பெறப்பட்ட எந்தவொரு கடன் தொகையிலிருந்தும் எட்டாயிரத்து எழுநூற்று ஐம்பது மில்லியன் (ரூபா 8,750,000,000) ரூபாவை விஞ்சாத மேலதிக குறைமதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| **செலவினத் தலைப்பு** | **001** | - | அதிமேதகு சனாதிபதி |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **02** | - | அபிவிருத்திச் செயற்பாடுகள் • |

| | |
|---|---|
| மூலதனச் செலவினம் | ரூ. 8,750,000,000 |
| **மொத்தச் செலவினம்** | **ரூ. 8,750,000,000** |

• கருத்திட்டம் 06 — “ தேசிய முன்னுரிமைகளுக்கான தேசிய அளவிலான வழிகாட்டுதல் மற்றும் ஒருங்கிணைப்பு”, நிகழ்ச்சித்திட்டம் 02 — செலவினத் தலைப்பு 001 இன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வரும் 024, 025, 026, 027, 028 மற்றும் 032 ஆகிய உப கருத்திட்டங்களின் கீழ் எதிர்பார்க்கப்படும் பயன்படுத்தப்படாத ஒதுக்கீடுகளை 003 ஆம் உப கருத்திட்டத்திற்கு மாற்றுவதன் மூலம் ரூபா எட்டு பில்லியன் எழுநூற்று ஐம்பது மில்லியன் மாத்திரம் (ரூ. 8,750,000,000) ஒதுக்கீடு செய்யப்படும்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2024 யூன் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

*6.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— இங்கு உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டு வகைப்பாடு குறியீடுகள் 1404-90-93 கொண்ட HS குறியீட்டின் மூலம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற I ஆம் நிரலில் குறிப்பிட்டுள்ள அழுத்தப்படாத மற்றும் அழுத்தப்பட்ட தென்னை நார் தொடர்பில் அந்த அட்டவணையில் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள அளவின் அடிப்படையில் செஸ் வரி அறவிடப்பட வேண்டுமென்பது குறித்து, விதிக்கப்பட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டியமைக் குறித்து 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கம் கொண்ட தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் 33 ஆவது பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இப் பாராளுமன்றம் தீர்மானிக்குமாக.

**அட்டவணை**

| | | ***I ஆம் நிரல்*** | ***II ஆம் நிரல்*** |
|---|---|---|---|
| தலைப்பு இலக்கம் | கூட்டு வகைப்பாடு (HS குறியீடு) | தேங்காய் உற்பத்தி | செஸ் வரி அளவு |
| | 1404-90-93 | பதப்படுத்தப்பட்ட தென்னை நார் (அழுத்தப்பட்ட மற்றும் அழுத்தப்படாத) | கிலோ கிராம் ஒன்றுக்கு 10 சதம் |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2024 யூன் 4) [1].

*8.

யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பால்நிலைசார் சமத்துவம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

பகிரங்க நிதிசார் முகாமைத்துவம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 சனவரி 24 ஆம் திகதிய 2368/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பிரதேசத்தில் “பிரத்தியேக புடவை தயாரித்தல் வலயம்” தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மார்ச் 28 ஆம் திகதிய 2377/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.05.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— ஜீ.எஸ்.எம்.பீ. தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை (2021),— 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 154(6) ஆம் பிரிவின் கீழ் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஜீ.எஸ்.எம்.பீ. தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனியின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.02.08/2024.02.09 ஆம் திகதிகளில் பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.03.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*22.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— டவர் மண்டப அரங்கத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2021),— 1978 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, டவர் மண்டப அரங்க மன்றச் சட்டத்தின் 12(5) ஆம் பிரிவின் கீழ் 2023.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய டவர் மண்டப அரங்கத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் நவீன பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.01.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.01.23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*24.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*25.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 நவம்பர் 27 ஆம் திகதிய 2360/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 13 ஆம் திகதிய 2371/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவின் கீழ் 2023.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து அலுவல்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.01.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

28.

மாத்தறைப் பருவம் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

29.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

இலங்கை வரைதல் தொழினுட்பவியலாளர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

ஹெக்டர் அப்புஹாமி ஹெல்பிங் ஹேண்ட் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

ஜனரஜ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---